இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 24 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 17 – வியாழக்கிழமை 03 செப்டம்பர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 24 : Thiruvalluvar Year - 2057 - Aavani 17 - Thursday 03 September 2026 - Dak 10 Pages ₹ 5.00


## போராட்டக்காரர்களை முதல்வர் சந்திக்க மறுப்பது ஏன்?

# தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கை எப்போது நிறைவேறும்?

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

சென்னை, செப். 3 -

**சட்டப் பேரவையில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, “தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கை எப்போது நிறைவேறும்?” என்றும் “போராடி வரும் தூய்மைப் பணியாளர்களை முதல்வர் சந்திக்க மறுப்பது ஏன்?” என்றும் கேள்வி எழுப்பினார்.**

சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் தொடர்பாக, ஆற்றிய உரை வருமாறு: -



ஆளுங்கட்சியினரின் தேர்தல் வாக்குறுதிகளில், தூய்மைப் பணியாளர்களுக்குப் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு போன்றவாக்குறுதிகள் முக்கியமானவை. வாக்குறுதிகள் எல்லாம் உடனே நிறைவேற்றப்பட வேண்டும் என்று, சென்னை மாநகராட்சித் தூய்மைப் பணியாளர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இன்றுடன் சேர்த்து அவர்களின் போராட்டம் 15வது நாளை எட்டியிருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு, இந்த அவையில் இந்த அரசின் கவனத்துக்கு இதை நாங்கள் எடுத்து வரும்போது, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் வெகு விரைவில் இதற்கு ஒரு நல்ல தீர்வு ஏற்படும் என்று, இந்த அவையில் பதில் சொல்லியிருக்கிறார். ஆனால், இதுவரைக்கும் எந்த சுமுகமான முடிவும் எட்டப்படவில்லை.

இந்தத் துறைக்குப் பொறுப்பு வகிக்கின்ற முதலமைச்சரை, அவர்கள் எல்லோரும் நேரடியாக சந்தித்து அவர்களின் கோரிக்கையை வைக்க வேண்டும் என்று தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

### 100 நாட்களைத் தாண்ட வேண்டுமா?

இன்றைய முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு, இதேமாதிரி தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் செய்யும் போது அவர்களின் கட்சி அலுவலகத்துக்கு அழைத்து வந்து, அவர்களை எல்லாம் சந்தித்து பேசியிருக்கிறார். எனவே, எங்களின் கோரிக்கை, நாங்கள் கேட்க விரும்புவது, இந்த அரசின் கவனத்துக்கு எடுத்துவர விரும்புவது, தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை, முதலமைச்சர் எப்போது நிறைவேற்றிக் கொடுப்பார். தூய்மைப் பணியாளர்களைச் சந்தித்து முதலமைச்சர் அவர்கள் பேசுவாரா என்பதை, இந்த அவையின் கவனத்துக்கு எடுத்து வந்து அமர்கிறேன்.

எங்கள் ஆட்சிக் காலத்தில் போராட்டம் நடந்தது. இங்கே பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பேசும்போது, ‘100 நாட்களைத் தாண்டி போராட்டம் நடந்தது’ என்று சொன்னார்கள், அப்படியானால் நீங்களும் 100 நாட்கள் தாண்டும் வரை காத்திருக்கப் போகிறீர்களா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

### ஒரு அமைச்சர் கூட சந்தித்துப் பேசவில்லை!

எங்கள் ஆட்சியில் போராட்டம் நடந்த போது, எங்களின் அப்போதைய அமைச்சர் சேகர்பாபு அவர்கள், மேயர் பிரியா அவர்களெல்லாம் தூய்மைப் பணியாளர்களைத் தொடர்ந்து சந்தித்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இப்போது ஆட்சியில் இருக்கும்போது ஒரு அமைச்சர்கூட அந்தப் போராட்டக் களத்துக்குச் சென்று அவர்கள் யாரையும் இதுவரை சந்திக்கவில்லை. ஆட்சியில் இல்லாதபோது தூய்மைப் பணியாளர்களைச் சந்திக்க தயாராக இருந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள், இப்போது தூய்மைப் பணியாளர்களைச் சந்திக்க மறுப்பது ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

110 விதியின் கீழ் முதலமைச்சர், பல்வேறு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார். அதில் வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டுள்ளன என்று அறிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றித் தான் இப்போது விவாதம் போய்க் கொண்டிருக்கிறது.

### தி.மு.கழக ஆட்சியில் 5 ஆயிரம் வழக்குகள் வாபஸ்!

இங்கு ஒரு அமைச்சர் பேசும்போது, இதுதான் வரலாற்றிலேயே முதல்முறை என்று பேசியிருக்கிறார். அது சரியான தகவல் இல்லை. எங்களின் ஆட்சியின் போது, எங்கள் தலைவர், ‘குடியுரிமை திருத்தச் சட்டம், ‘வேளாண் சட்டம்’, ‘8 வழிச்சாலை போராட்டம்’, அமைச்சர் அண்ணன் வன்னியரசு அவர்கள் சொன்னதுபோல, ‘கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு’, ‘மீத்தேன் எதிர்ப்பு போராட்டம்’ உள்ளிட்டப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது போடப்பட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகளை, எங்கள் தலைவர் முதலமைச்சராக இருக்கும்போது வாபஸ் பெற்றுள்ளார்.

### 110 - விதியின் கீழ் அறிவிக்கவில்லை!

ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அப்போது எங்களின் தலைவர், முதலமைச்சர் அவர்கள் 110 விதியின் கீழ் அறிவிக்கவில்லை. அதிகாரிகளை அழைத்துச் சொல்லிவிட்டு, இந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் செய்கிறோம் என்று இந்த அவையில் தெரிவித்தார். இன்னும் ஒரேயொரு விஷயம். வேளாண்துறை அமைச்சர் குறிப்பிட்டு பேசும்போது, விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகள்.... என்ற வார்த்தையை சொல்லியிருக்கிறார். அதை நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை ஆற்றினார்.

---

## கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி கோரி

# சென்னையில் விவசாயிகள் உண்ணாவிரதப் போராட்டம்!

சென்னை, செப். 3 -

கூட்டுறவு பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி, சென்னை எழும்பூரில் விவசாயிகள் காலவரையற்ற உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் அளித்த உத்தரவாதத்தின்படி, கூட்டுறவு பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் உள்பட 35 விவசாய சங்கங்கள் சார்பில், காலவரையற்ற உண்ணாவிரதம் மற்றும் தொடர் காத்திருப்பு போராட்டம் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் கோரிக்கையை வலியுறுத்தி விவசாயிகள் முழக்கங்கள் எழுப்பினர்.

போராட்டத்தில், தமிழக விவசாயிகள் சங்க கூட்டு இயக்கம் பொதுச் செயலாளர் ஏ.எஸ்.பி. ரவீந்திரன் கூறியது: தேர்தலின்போது, வாக்குறுதி அளித்த அப்போதைய முதல்வர் வேட்பாளர், 5 ஏக்கர் உள்ள விவசாயிகளின் கடனை முழுமையாகவும், பெரிய விவசாயிகளின் கடனை 50 சதவீதம் வரையும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்.

ஆனால், விவசாயிகள் பயிர்க் கடன் தள்ளுபடியில் மிகப் பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளார். எனவே, ஒற்றை கோரிக்கைக்காக 3வது கட்ட போராட்டத்தை தமிழக விவசாயிகள் நடத்தி கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு தேர்தலின்போது, அரசியல் கட்சி தலைவர்கள், வாக்குறுதிகளை மட்டும் அளித்தனர். ஆனால், தற்போதைய முதல்வர், “இது வாக்குறுதிகள் அல்ல. உத்தரவாதம்” என்று தெரிவித்தார்.



2006ம் ஆண்டு முதல் மூன்று முதல்வர்கள் கடன்களை தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டத்தில் வாடுகிறோம். இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படுகிறோம். எனவே, கடன் தள்ளுபடி அவசியம். முதல்வர்கள் அறிவித்த உத்தரவாதப்படி, கடன் தள்ளுபடி வேண்டும் என கோரிக்கை விடுக்கிறோம்.

முழுமையான விடுதலை வேண்டுமெனில், கடன் தள்ளுபடி விடுதலை வேண்டும். இதை அறிவிக்க வேண்டும். அதுவரை போராட்டம் தொடரும். முக்கிய பொறுப்பாளர்கள், பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் காவல் துறையின் அழைப்பை ஏற்று, அரசை சந்திக்க பேச்சுவார்த்தைக்கு சென்றுள்ளனர்.

மேட்டூர் அணையில் குறைந்த தண்ணீர் உள்ள நிலையில் திறந்தது வருத்தத்தை அளிக்கிறது. இது யாரோ கொடுத்த தவறான தகவல் அடிப்படையில் திறந்துள்ளனர். மேட்டூர் அணை நீர் மேலாண்மை உணர்ச்சிபூர்வமானது. கலந்தாலோசித்து விவசாயிகள் அனுபவத்தோடு செய்திருக்க வேண்டும். தவறான வழிகாட்டுதல் பேரில், முதல்வர் தண்ணீர் திறந்து உள்ளார்” என்று அவர் கூறினார்.

---



## தி.மு.க. முப்பெரும் விழாவில் விருது பெறுவோர்

2026ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் சென்னை, அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கில்" நடைபெறும், தி.மு.க. முப்பெரும் விழாவினையொட்டி ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற விருதுகளான

### பெரியார் விருது



விவசாய அணி துணைச் செயலாளர்

**திரு. கு. செல்லப்பா** அவர்கட்கும்

### அண்ணா விருது



சேலம் மத்திய மாவட்ட அவைத் தலைவர்

**திரு. சேலம் ஜி.கே. சுபாஷ்** அவர்கட்கும்

### கலைஞர் விருது



கழக துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. மாநிலங்களவை குழுத் தலைவருமான

**திரு.திருச்சி சிவா, எம்.பி.,** அவர்கட்கும்

### பாவேந்தர் விருது



கழக மருத்துவ அணித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான

**திருமதி. கனிமொழி என்.வி.என். சோமு** அவர்கட்கும்

### பேராசிரியர் விருது



தலைமைச் செயற்குழு உறுப்பினர்

**திரு. மிசா எஸ். அகமது தம்பி** அவர்கட்கும்

### மு.க.ஸ்டாலின் விருது



இளைஞர் அணி துணைச் செயலாளர்

**திரு. நா. இளையராஜா** அவர்கட்கும் வழங்கப்படும்.

நாள்: 01-09-2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.